# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, நவெம்பர் மாதம் 16 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 19/2005

**மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்**

"மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கம்" என அழைக்கப்படு வதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், விடயங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் கண்டியில் தாபிக்கப்பட்டிருந் ததாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் விடயங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அந்தப்பல் வேறு குறிக்கோள்களையும் விடயங்களையும் இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களது நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் சொல்லப்பட்ட மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கத்தின் (இதனகத்துப் பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப் படும் அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) " மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும். மத்திய இலங்கை முஸ்லிம் மகளிர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தலைமையகமாக ஒரு கட்டடத்தை நிருமாணித்தலும் சாதன வசதிசெய்தலும் அத்துடன் பேணுதலும் ;

(ஆ) முஸ்லிம் இளம்பிள்ளைகளுக்கான குர்-ஆன் வகுப்புக்களை நடாத்துதல் ;

(இ) பாடசாலையை விட்டுவிலகிய இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் சிறுவர்களுக்காக வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் ;

(ஈ) வயோதிப மற்றும் அநாதரவான வறிய முஸ்லிம்கள் மட்டில் சமூகசேவை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் ;

(உ) இன்றியமையாச் சமூகத் தேவையை இனங்கண்டு, சமூகத்துக்குத் திருமண ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடு செய்தலும் தேவைப்பாடுடைய முஸ்லிம்களுக்குத் திருமணத்தை நடாத்த வசதியளித்தல் ;

(ஊ) விசேடமாக வயோதிப முஸ்லிம் மகளிருக்காக தலைமையகத்தில் நூலகமொன்றையும் பொழுதுபோக்கு அறையொன்றையும் தாபித்தலும், பேணுதலும்;

(எ) பெண்பிள்ளைகளுக்கான அநாதை இல்லமொன்றை தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) மத்திய மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலும் சங்கத்தின் கிளைகளைத் தாபித்தல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்துவதற்காக சுகாதார முகாம்களையும், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்துதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அல்லது விரும்பத்தக்கதான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும், செய்யவும், புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், முடிவுறுத்தல்

என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும், திரட்டவும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்துக்குரியதான அல்லது அதனால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனுமொரு காணியில் எவையேனும் கட்டடங்களை நிர்மாணிப் பதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவைப்பட்ட அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத் தல், தொழிலுக்கமர்த்துதல், வேலையைவிட்டு நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.*

**5**. *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படும் பதவிதாங்குநர்களையும் அவ்வாறான வேறு ஆட்களையும் கொண்ட குழு ஒன்றின்மூலம் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியில் உள்ள சங்கத்தில் பதவிதாங்குநர் உறுப்பினர்களும் இச்சட்டத்தின் அட்டவணையில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளவர்களுமான ஆட்களும் கூட்டுத்தாப னத்தின் முதலாவது குழுவில் அடங்குதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. *(1)* ஏதேனுமொரு ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அல்லது குறிப்பிட்ட நோக்கத்திற்காக விசேடமாகக் கூட்டப்பட்ட பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும் பான்மைகொண்டு கீழ்காணும் விடயங்கள் எல்லாவற்றிற்காகவும் அல்லது அவற்றில் எவையேனும் தொடர்பில் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களதும் பதவிதாங்கு னர்களதும் நியமனம், பதவிநீக்கம், பதவிக்காலம் அத்துடன் அவர்களது தத்துவங்களும் கடமைகளும், நடத்தையும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தாலும் குழுவினாலும் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பொதுவாகவும், கூட்டங் களைக் கூட்டுவதில் குறிப்பாகவும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தலும் அவ்வாறான கணக்குகளை நடைமுறைப்படுத்துதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகவர்களினதும், அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் கடமைகளும் பணிகளும்;

(உ) மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவான ஏனைய விடயங்கள்.

(2) கூட்டுத்தாபனத்தின் எவ்விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடைகள், மரணசாதனக் கையளிப்பு, மானியங்கள், கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் உறப்பட்ட செலவுகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் வருமானம், செலவினம் சொத்துக்கள் பொறுப்புகள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கணக்குகள் என்பன பற்றிய முறையான கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். இந்த உட்பிரிவில் தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்பது அரசியலமைப்பின் 154(8) ஆம் உறுப்புரையிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

**9.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் சங்கத்திற்குரிய தான எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சங்கத்திற்கு வருமதியாக வுள்ள கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*சங்கத்தினால் அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலனவான கடன்கள்.*

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்புமூலமாகவோ வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்க வும் சட்டத்தில் இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் அதனைக் கையுதிர்ப்பதற்குரிய முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்க லாமென்பது.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவரது அல்லது உபதலைவர் ஒருவரினதும் செயலாளரினதும் அல்லது உப செயலாளரினதும் முன்னிலையிலன்றி எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந் ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது வேறு ஏதேனும் குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்